## அக்கரைப்பற்றில் ஊர்காவல் படையினரின் அட்டகாசம்; 12 தமிழர்கள் வெட்டிக் கொலை!

(மட்டக்களப்பு)

அக்கரைப்பற்றில் அளிக்கம்பை தேவ மாதிரிக் கிராமத்தினுள் நுழைந்த ஊர்காவல் படையினர் நடாத்திய அட்டகாசத்தில் 12 தமிழர் கொல்லப்பட்டும் 19 பேர் படுகாயமடைந்துமுள்ளனர், 175 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இவ்வார முற்பகுதியில்இடம் பெற்றஇச்சம்பவத்தையடுத்து அம்மாதிரிக் கிராமத்தைச்சேர்ந்த 175 குடும்பங்களும் கள்ளியன்தீவு அகதிமுகாமில் தஞ்சமடைந்துள்ளனர்.

இராணுவத்தின் உதவியுடன் ஊர்காவல்படையினர் அங்கிருந்தவர்களை வெட்டியும் சுட்டும் கொலை செய்தனர் பொதுமக்கள் அவ்விடத்தை விட்டு தப்பியோடியதும் வீடுகளுக்கு தீவைத்துள்ளனர்.

இவ்வாறு 104 கல்வீடுகளும் 71 ஓலைக் குடிசைகளும் தீவைக்கப்பட்டு முற்றாக நாசமாக்கப் பட்டுள்ளது. (சி)


விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 புரட்டாதி: 27 ந:அவ்வல் பிறை: 23 இதழ்: 171

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13 10-1990


## பலாலி முகாமிலிருந்து அகோர ஷெல் தாக்கு

### இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று நண்பகல் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஷெல்கள் கோண்டாவில், நீர்வேலி, கோப்பாய், உரும்பராய் மற்றும் பல பகுதிகளில் வீழ்ந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

கோண்டாவில் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினுல் ஒருவர் பலியானுர். உரும்பிராயில் விழுந்து வெடி

[4-ம் பக்கம் பார்க்க]

# ● இனப்பிரச்னை குறித்து இந்தியாவின்மத்தியஸ்தத்தை இலங்கை அரசு எதிர்க்கும்!

## மிரட்டலுக்கும் அஞ்சோம்

### அமைச்சர் ரஞ்சன் பேட்டி

[புதுடில்லி]

**"இலங்கையின் இனப்பிரச்னை தீர்வுக்கு இந்தியா மத்தியஸ்தம்செய்ய முயன்றுல் அதனைநாம் எதிர்ப்போம். இந்தியாவின் பயமுறுத்தலுக்கு ஒருபோதும் அடிபணியோம்"**

இவ்வாறு ஸ்ரீலங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன இந்திய சஞ்சிகை ஒன்றிற்களித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இந்தியா இந்த விவகாரத்தில் முன்பு சம்பந்தப்பட்டிருந்தது, எனவே மத்தியஸ்தம் சர்வதேச ரீதியிலானதாகவே இருக்கவேண்டும். இந்தியாவிடம் மட்டும் இதை விடக்கூடாது. ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவும் இதனையே விரும்புகிருர்,

இந்தியாவின் ஆலோசனையை வரவேற்போம். ஆனல் அதன்மத்தியஸ்தம்பற்றி நாம் விரும்பவில்லை. ஜனாதிபதியே தீர்மானிக்கவேண்டும். இதனை அவர்ஏற்பாரோ தெரியவில்லை இந்தியா எம்மைப் பயமுறுத்தினுல் அதனை நாம் ஏற்க

(4-ம் பக்கம் பார்க்க)

## "தமிழ் ஈழப்போரை கலைவடிவமாக்கிய மக்கள் கலைஞர்"

(யாழ்ப்பாணம்)

இன்று மக்கள் கவிஞர் வி. எம். குகராசாவின் 3வது நினைவுநாள். இந்திய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான இவர் தன் வாழ்வில் ஒவ்வொரு மணித்துளியையும் மனித போராட்டத்துக்காவும் அடிமட்டத்து மக்களின் துயர் தீர்ப்பதற்காகவும் தமிழ் மக்களின் தேசிய இனப் போராட்டத்தை வென்றெடுக்கவுமே செலவிட்டார்.

''மனிதனும் மிருகமும்'' என்னும் நாடகம் மூலமும், ''தியாகம்'' எனும் வீடியோ படம் மூலமும் தமிழ் மக்களிடம் பிரபல்யமடைந்தார். எமது தாயக விடுதலைப் போராட்டத்தைக் கலைவடிவமாக்கிய கலைஞர்களில் இவர் முக்கியமானவர்.

கவிஞர் குகராசாவின் நினைவுக் கூட்டம் இன்று ஏழாலை

[4-ம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்ட பாடசாலைகள் 15ம் திகதி ஆரம்பமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் இம்மாதம் 15 ம் திகதி திங்கள்முதல் ஆரம்பமாகவுள்ளன. சகல வகுப்புகளும் நடைபெற வேண்டும் என்று யாழ் மாவட்ட பாடசாலை அபிவிருத்தி சங்க சம்மேளன விசேட கூட்டத்தில் ஏகோபித்து நேற்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு இணைப்பை முஸ்லிம் கட்சிகள் எதிர்க்கும்

### நேற்றைய மாநாட்டை பகிஷ்கரிப்பு

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் சர்வஜன வாக்கெடுப்பின்றி நிரந்தரமாக இணைக்கப்படுவதை பல முஸ்லிம் கட்சிகள் எதிர்ப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கை வாக்கெடுப்பின்றி நிரந்தரமாக இணைத்து மாகாணசபைக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவது தொடர்பாக ஜனதிபதி திரு. பிரேமதாசா நேற்று அனைத்து கட்சி மாநாட்டை கூட்டியிருந்தார்.

இம்மாநாட்டில் முஸ்லிம் கட்சிகள் எதுவும் கலந்து கொள்ளாது புறக்கணித்திருந்தன. மேற்படி வாக்கெடுப்பின்றி வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைப்பதை எதிர்த்தே இவை மாநாட்டில் கலந்துகொள்ளவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. [சி]

## மிதிவெடியில் சிக்கி மூவர் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

மிதிவெடியில் அகப்பட்ட இருவர் கால்களை இழந்ததுடன் அருகிலிருந்த பெண் ஒருவர் படுகாயமடைந்தார்.

மண்டைதீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கிருஷ்ணபிள்ளை மோகனதாஸ் (வயது 14)என்பவர் இடது காலையும், வைரவநாதன் கெங்காதரன் (வயது 35) என்பவர் வலது காலையும்இழந்தவர்களாவார். அருகிலிருந்த இராநாயகி கிருஷ்ணபிள்ளை (வயது 50) என்ற பெண்மணிகாயமடைந்தவராவார்.

இராணுவம் விட்டுச்சென்ற முகாமில் காணப்பட்ட கூரை

(4ம் பக்கம் பார்க்க)

## பொத்துவில் பகுதியில் 9 பொதுமக்கள் கொலை!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவிலில் நேற்று ஒன்பது பொதுமக்ககள் கொலை செய்யப்பட்டு காட்டுப்பகுதியில் சடலங்கள் போடப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

வாகனேரியிலிருந்து இரு டிராக்டரில் பொத்துவில் நோக்கி சென்றவர்களே கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை நிலை குறித்து சிங் - கருணாநிதி சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கையின் தற்போதைய நெருக்கடிநிலை குறித்து இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங்குடனும் வெளிநாட்டமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ராலுடனும் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி நேற்றுமுன்தினம் முக்கிய பேச்சுக்கள் நடாத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞான 1-ம் ஆண்டு பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் பௌதிக விஞ்ஞானம் 1989 முதலாம் ஆண்டு விஞ்ஞானப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளது.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்துள்ள பரீட்சார்த்திகளின் விபரம் பின்வருமாறு:

ஏ. ஆர். பிள்ளைநாயகம், எம். சீ. அன்ரனி, செல்வி ஆர். கல்யாணி, ஏ. சி. கருணாகரன், எஸ். பத்மராசா, எஸ். செல்வக்குமார், எஸ். செல்வநாயகம், செல்வி ஏ. சாந்தினி, செல்வி எம். சிவகௌரி, எஸ். தருமரூபன், பி. வசந்தகுமார், ரி. வசந்தராஜா, செல்வி எஸ். விஜிதா, எஸ். வாப்பிக், செல்வி ஏ. ரி. யோசவ், எம். ஆர். வாஜிகா, ரி. பாஸ்கரராஜா, கே. ராஜன், ஏ. ஏ. பி. பாஸ்கரன், எஸ். மணிவண்ணன், செல்வி என். ஆறுமுகம், செல்வி ஆர். பற்றிசியா, எம். இரவீந்திரராஜா, கே. செந்தில்வடிவேலு, லி. சிவாநந்தன், ஜே. ரி. ஞானநேசன், செல்லி ஐ. கோமதி செல்வி எஸ். வளர்மதி, செல்வி ஆர். கிரிஜா, எம். நந்தக்குமார், செல்வி பி. பாரதி, எஸ். சிவராஜா, ஏ. ரி. அன்பழகன், எஸ். அனுலன், ஏ. அருளீசன், செல்வி ஏ. பிரிந்தா.

ஆர். ஜி. சந்திரகுமாரன், ஏ. ஞானமோகன், ஆர். அன்ரன் இன்பராஜ், செல்வி பி. ஜி. ஜெஸ்லின் ஜெயராணி செல்வி பி. கிருஷ்ணவேணி, எப். குலதீபன், எம். நடேஸ் வரலிங்கம் வி. நகுலேஸ்வரன், எஸ். பரம்தில்லைராஜன், கே. ஈ. பிரதீபன், ரி. ரவிசங்கர், செல்வி ஜி சாந்தினி.

எஸ். சத்தியகுமார், கே. செந்தூர்முருகன், செல்வி எஸ். சண்முகப்பிரியா, பி. ஆர். சிவாநந்தன், கே சிவநேசன், எஸ். ஸ்ரீநாத், எஸ். சுகேந்திரன், செல்வி எஸ். சுந்தரவதனி, கே. சுதாஹரன், ரி. திருஞானசம்பந்தன், எம். திருஞானசம்பந்தர், கே. திருலோகசுந்தரம், பி. விஜயகுமரன் செல்வி என். விஜயநந்தினி, வி. சந்திரசேகர், எம். பி. சுரேஷ்குமார், எம். முரளிதரன், கே. ரமணி ஐயர், செல்வி எஸ். சிவமதி, வி. கே. முருகையா, ரி. திருமால், கே. சுபேந்திரன், ஏ. சத்தியமூர்த்தி, எஸ். செல்வராஜன், எஸ். பி. கெங்காதரன், ஏ. சந்திரமோகன், ஏ. நித்தியாநந்தன், செல்வி எஸ். சிந்ததேவி, எஸ். சிவராஜா, ஏ. திருமாறன், கே. தர்மசீலன், பீ. முரளி மனோகரன், கே. திருவரன், என். ஸ்ரீகரன், செல்வி ஈ. ஏ. கே. வேதநாயகம், செல்வி பி. ஜெயதேவி, செல்வி எம். மாலினி, வி. எஸ். போல்ராஜ், வீ. ரவீந்திரன், ரி. றிக்சட் ஜெயகரன், ரி. தவநாதன், கே. உதயசந்தர்.

கே. பேரானந்தரூபன், செல்வி கே. கல்யாணி, எஸ். செல்வக்குமார், கே. ஸ்ரீசங்கர், கே. யோகராஜா' வி. மணிவண்ணன்.

மேற்படி பரீட்சையில் நான சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் விபரம் வருமாறு:

எஸ். பகீரதன், செல்வி ஜே. பி. துல்சி, எம். ஆர். குலேந்திரன், பி. பிரபாகரன், செல்வி எம். மஞ்சுளா, ரி. ஞானசுந்தரன், எஸ். அருள்பரம். ஏ. நடேசரத்தினசிங்கம், சி. இராஜமோகன், எஸ். இராஜகோபாலன், எஸ். பி. தமிழ்வேந்தன், ஈ. கே, வி. ஜோன்சன், ஏ. மத்தியு.

மேற்படி பரீட்சையில் மீள் நான சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் விபரம் வருமாறு:

எஸ். சண்முகநாதன், செல்வி ஏ. நாகரத்தினம், செல்வி ஏ. சுபாக்ஷினி, எஸ். அமரசோதி, ஏ. ஞானேஸ்வரன், ஆர். ஸ்கந்தராஜா.

1989ம் ஆண்டுக்கான முதலாம் ஆண்டு விஞ்ஞானப் பரீட்சையில் இரசாயனவியலில் செல்வி எஸ். சுபோதினி சிறப்புப் பரிசாக எம். வரதராஜா ஞாபகார்த்தப் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

மேற்படி பரீட்சை முடிவுகள் யாவும் பல்கலைக்கழக மூதவையினால் உறுதிப்படுத்த வேண்டியவை ஆகும். (153)

## உ. அ. அதிபர் நியமனம்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு உடுவில் பகுதி உதவி அரசாங்க அதிபராக திரு. வி. வீரகத்திப்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

உடுவில் அரசாங்க அதிபராக கடமையாற்றிய திரு. ஆ. மகாலிங்கம் நல்லூர் உதவி அரசாங்க அதிபராக இடம்மாறி சென்றதையடுத்து இவரது நியமனம் இடம்பெற்றது. (109)

## புரட்டாதி சனி விரத அனுஷ்டிப்பு

(வட்டுக்கோட்டை)

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலில் இன்று புரட்டாதிச் சனி விரதம் அனுட்டிக்கப்படவுள்ளது.

காலை விசேட பூசைகளும் மாலை எள் எண்ணெய் எரிக்கும் நிகழ்ச்சியும் இடம்பெறும். (139)

## ஒயில் திருட்டு அதிகரிப்பு

(சித்தன்கேணி)

பாணவெட்டி' மூளாய் ஆகிய பகுதிகளில் உள்ள மின்மாற்றிகளில் இருந்த ஒயில் முற்றாக திருடப்பட்டுள்ளது.

பாணவெட்டி, மூளாய் ஆகிய பகுதிகளில் உள்ள மின்மாற்றிகளில் ஒயில் முற்றாக களவாடப்பட்டுள்ளதுடன் மூளாய் வைத்தியசாலைக்கு அருகாமையில் உயர் மின் அழுத்த கேபிள்களும் வெட்டப்பட்டுள்ளது.

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடாத்தும் மாவீரர் தின கலை கலாசாரப் போட்டிகள்

தமிழீழ மக்களே!

★ இவ்வாண்டு மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் எழுத்தாளர், கலைஞர்கள், மற்றும் இத்துறையில் ஆர்வமிக்கோர், மாணவர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்காகவும் கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

★ இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

★ நாவல் ★ சிறுகதை ★ கவிதை
★ கட்டுரை ★ சுவரொட்டி

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

★ தமிழீழத்தில் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வமும் ஆற்றலுமிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

## போட்டிகளுக்கான விதிமுறைகள்

★ தமிழீழ மக்கள் எவரும் கலந்துகொள்ளலாம்.

★ படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாகக் கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும், சமகால எமது மண்ணினதும் மக்களதும் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்ட யதார்த்தத் தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளினதும், வீராங்கனைகளினதும் உணர்வுகளையும், இதயதாகத்தையும் பிரதிபலித்தல்வேண்டும்.

★ சுவரொட்டிக்கான கருப்பொருள்களும் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் வேண்டும்.

★ இலக்கியப் படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

★ சிறுகதைகள் 10 பக்கங்களுக்குக் மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ சுவரொட்டிகள் யாவும் 'ஆர்ட்போட்' டில் 60 cm x 40 cm அளவு கொண்டதாக வண்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகப் படுத்தப்படலாம்) கறுப்பு வெள்ளைப்படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

★ போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோர் மூலம் அவர்களது சொந்தப்படைப்புத்தான் என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

★ போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் நல்லது.

★ போட்டிகளுக்கான படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி 15-10-1990.
அனைத்து ஆக்கங்களும் 'ஈழநாடு'' அலுவலகத்திற்கே குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

★ தகுதிவாய்ந்த நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியாகும்.

## மாணவர்க்கான போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

★ மாணவர்க்கான போட்டிகள் பின்வரும் விடயங்களில் நடைபெறும்.
(1) சிறுகதை (2) கவிதை (3) கட்டுரை (4) ஓவியம்

★ சிறுகதை, கவிதை, ஓவியம் ஆகியன மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஓவியங்கள் 18'' x 12'' அளவு கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக் கொண்டதாகவும் 2500 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.
1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்.
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3. தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்.
4. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் சமூகப்பணிகள்.
5, ''போராடுவதற்காகக் கற்போம்''.

★ மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பகுதிகளாக நடாத்தப்படும்.
15 வயதிற்குட்பட்டோர் கீழ்ப்பிரிவு
15—17 வயதிற்கிடைப்பட்டோர் மத்தியபிரிவு
17 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு

★ ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்,

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### சித்த மருத்துவத்துறை

### கைதடி

சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு 89–90ம் கல்வி ஆண்டிற்கான விரிவுரைகள் நவம்பர் மாதம் 5ம் திகதி ஆரம்பமாக உள்ளன. 1989-90ம் கல்வி ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப்பரீட்சை சென்ற யூன்மாதம் 11-ம் திகதி நடைபெற்றது. அன்றைய தினம் சமுகமளித்த எல்லா விண்ணப்பதாரரும் நவம்பர் 5-ம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தேர்வுக் கிளையில் 89-90ம் ஆண்டிற்கான சித்த மருத்துவத்துறை மாணவர்களாக பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். விரிவுரைகளும் அன்றைய தினம் ஆரம்பமாகும். புதிய மாணவர்களுக்கான கடிதங்கள் கூடிய விரைவில் அனுப்பப்படும். தங்கள் விலாசங்கள் மாறுபட்டிருப்பினும் நேரடியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தேர்வுக் கிளையில் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

பதிவாளர்.

## Postgraduate Diploma in Education

The lectures for the Part-Time Course parts one and two will commence on the 10th November, 1990.

The Full Time Course will commence on January 1991.

VICE-CHANCELLOR

University of Jaffna.
Thirunelvely.
1990-10-11.

RE-OPENING OF THE UNIVERSITY OF JAFFNA

## For Teaching

The re-opening of all the Faculties of the University of Jaffna for teaching including new admissions will commence on Monday the 5th November, 1990.

VICE-CHANCELLOR
University of Jaffna.
1990-10-11.

## பட்டப்பின் கல்வி டிப்புளோமா 1990

பகுதிநேரக் கற்கை நெறிகள் பகுதி 1' பகுதி 11 க்கான விரிவுரைகள் 1990 நவம்பர் 10-ம் திகதி ஆரம்பமாகும்.

முழுநேரக் கற்கை நெறிக்கான விரிவுரைகள் 1991 ஜனவரியில் ஆரம்பமாகும்.

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
1990 - 10 - 11

## யாழ். பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உள்ள சகல பீடங்களுக்குமான விரிவுரைகள் 1990 நவம்பர் 5-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.
1990 - 10 - 11

(ஏ-0825)

# "வல்லரசுப்போர் விமான உற்பத்தியில் இலங்கை தமிழ் மண்ணுக்கு கிராக்கி"

## ஈழப் போரால் அரசுக்கு தலையிடி

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதியில் நடைபெற்று வரும் யுத்தம் சிறுபான்மை தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை மறுப்பதுடன் எமது தாயகப் பிரதேசத்தையும் ஆக்கிரமித்து அங்கிருந்து தமிழர்களை முற்றாக வெளியேற்றும் நடவடிக்கைகளையும் மையமாக கொண்டுள்ளது இதற்குஅங்கு நடைபெற்று வரும்சம்பவங்களே கண்கூடு.

வடக்கை கைப்பற்ற முடியாத இராணுவம் கிழக்கில் முக்கிய நகரங்களை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக அரசு கூறுகிறது. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர்பிரதேசத்தை கோரியே புலிகள் தமிழீழ போராட்டத்தில் முன்னேறி வருகிறார்கள் இது பெருமளவில் சாத்தியப்பட்டும் வருகிறது.

வடபகுதி பிரிந்தாலும் கிழக்கை முற்றாக பிடிக்க வேண்டுமென்ற அரசின் கடும் பிரயத்தனத்துக்கு சாதகமாக அங்கு அதி முக்கியத்துவமான பொருளாதார நிலையும் உள்ளது. இதன் முக்கியத்துவத்தையும் மகத்துவத்தையும் அரசு முன்னர் அறியவில்லை. அதற்கு யுத்தமும் ஓர் காரணமாயிருந்துள்ளது.

உலகில் காணப்படும் கறுத்த இல்மனைற், சிவத்த ரூரைல் ரைரேனிய உலோக வகையைச் சேர்ந்தவை. உலகிலே மிகவும் கூடுதலாக இந்த உலோக வகை காணப்படும் குறைந்தளவு நாடுகளில் இலங்கையின் கிழக்கு மாகாண தமிழ்ப் பகுதியும் குறிப்பிடத்தக்கது. இதன் முக்கியத்துவம் புதிய தொழில் நுட்பம்

இலங்கை கனிப்பொருள் கூட்டுத்தாபனம் குறைந்தபட்சம் ஒரு டசின் நாடுகளுடன் தொடர்புகொண்டு ரைரேனியத்தை மிக அதிக லாபத்துடன் விற்பனைசெய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

**(வடக்கு-கிழக்கில் எமது தாயகமண்ணை பெருமளவு தமிழர்கள் நேசிக்கிறார்களோ இல்லையோ அதனை வல்லரசுகள் நேசிக்கின்றன. கிழக்கில் திருமலை, புல்மோட்டை பகுதியில் காணப்படும் முக்கிய கனிப்பொருள் தாதுக்கள் வல்லரசுகளின் அதிவேக, தொழில்நுட்ப, போர் விமானங்களுக்கும், விண்வெளி கலங்களுக்கும், சற்றலைற்றுகளுக்கும் அதிமுக்கியத்தும் வாய்ந்ததாக அமைகிறது.**

**இது தொடர்பாக 'ஏசியா வீக்'கில் வந்த புள்ளிவிபரங்களின் அடிப்படையில் இக் கட்டுரை அமைகிறது.)**

### தாதுக்களின் படிவு

கிழக்கில் திருமலை புல்மோட்டை, கடலோரப் பகுதிகள் அதிமுக்கிய கனிப்பொருள் தாதுக்களை வாரி வழங்கி வருகிறது: புல்மோட்டையிலும் திருமலையிலுமாக சுமார் 7 கிலோ மீற்றர் நீள கடற்கரையோரத்தில் இல்மனைத், ரைரேனியம், கறுப்பு சிவப்பு நிற சிறைபற் தாதுக்களின் படிவுகள் பெருமளவில் காணப்படுகிறது.

### போர்விமானத்திற்கான கனிப்பொருள்

ரைற்ரேனியம் கனிப்பொருள் அதிக பலம் வாய்ந்ததாகவும் பாரம் மிகவும் குறைந்ததாகவும் இருப்பதால் வல்லரசுகள் இதனைப் போர் விமானங்கள் தயாரிக்கப் பெருமளவில் பயன்படுத்துகின்றன. அமெரிக்கத் தயாரிப்பான F-14 ரகப் புதிய போர் விமானங்கள் தற்போது மிகவும் பாரம் குறைந்ததாகவும் அமைந்துள்ளது.

இதன் பல முக்கிய பாகங்கள் ரைற்ரேனியம் மூலமே தயாரிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் அண்மையில் வெளியிடப்பட்டு பரபரப்பாக ஓடிக்கொண்டிருக்கும் 'ரொப்கன்' என்ற திரைப்படத்தில் 'ரொம் காற்'ராக இவ் விமானம் செயற்படுவதையும் காணமுடிகிறது.

மூலம் தற்போது வல்லரசுகளின் மத்தியில் உணரப்பட்டு வருகிறது.

### பொருளாதார முக்கியத்துவம்

சுத்திகரிக்கப்பட்ட இல்மனைற் பல தொழில் நுட்ப பாவனைக்கும் பயன்படுகிறது. பெயின்ற், பேப்பர், பிளாஸ்ரிக் போன்றவற்றில் ஒரு நிறமூட்டியாகவும் பயன்படுத்தப் படுகிறது. இவற்றிலும் பார்க்க மிக அதிக பண வருவாயைக் கொடுப்பது ரைரேனியமாகும். இக்கனிப்பொருள் திருமலையிலும், புல்மோட்டையிலும் பெருமளவில் உண்டு.

இலங்கையில் எடுக்கப்படும் இல்மனைற்றில் ஐம்பது வீதம் ரைரேனியமாகும். இல்மனைற் என்பது உலகில் சில நாடுகளில்தான் இந்த அளவில் காணப்படுகிறது. இதனால் இது மிகவும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

இவ்வாறு இக்கனிப்பொருள் காணப்படும் அந்த நாடுகள் அதனை வல்லரசுகளுக்கு விற்பனை செய்வதன்மூலம் பல கோடி டாலர்களை வருமானமாகப் பெற்றுவருகின்றன. ஆனால் இலங்கையில் இதன் சாதாரண தொழில் நுட்ப பிரிவு தற்போதுதான் காணப்பட்டுள்ளது.

### அமெரிக்கா, ஜப்பான் கொள்முதல்

ரைரேனியம், இராணுவ தளபாட உற்பத்திக்கு மிகவும் அவசியமாயிருப்பதால் இராணுவ தளபாட உற்பத்தி நிறுவனங்கள் புல்மோட்டையில் கிடைக்கப்பெறும் ரைரேனியத்தை பெருமளவில் விரும்புகின்றன. தற்போது இங்கு எடுக்கப்படும் இல்மனைற்றில் பெருமளவை அமெரிக்காவும் ஜப்பானுமே கொள்முதல் செய்துவருகின்றன.

**ரி. சிவகணேசன்**

இதனை கொள்முதல்செய்ய பலநாடுகள் தற்போது ஆர்வம்காட்டி வருகின்றன. மண்வள ஆராய்ச்சி நிபுணர்களின் ஆய்வின்படி இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் திருமலை புல்மோட்டை, பகுதிகளில் பல கி. மீற்றர் தூரத்திற்கு அடுத்த நூற்றாண்டிலும் இவை தொடர்ந்தும் கிடைக்கக்கூடியதாயுள்ளதாக அறியப்பட்டுள்ளது.

இன்று மிகவும் தரமற்ற தொழில்நுட்ப குறைவால் இக் கனிப்பொருட்கள் பெறப்படும் அளவும் கிடைக்கும் லாபமும் மிகக்குறைவாகவே உள்ளது. மேலும் இத்தாது காணப்படுமிடங்களில் உள்நாட்டு யுத்தம் காரணமாகவும் பெருமளவு போராளிகளின் கட்டுப்பாட்டிலுமுள்ளதால் நவீன தொழில் நுட்ப முறைகளை பிரயோகிக்க முடியாத நிலையில் அரசு உள்ளது.

### இல்மனைற் விலை

சாதாரண முறையில் 480 தொழிலாளர்களே இல்மனைற்றை மணலிலிருந்து பிரித்தெடுக்கின்றனர். ஒருதொன் இல்மனைற்றின்விலை 650அமெரிக்க டாலராகும். ஈடுபடுத்தப்பட்ட முதலில் தற்போது இலங்கைக்கு 35வீதம் லாபமாக வருடம்தோறும் கிடைக்கிறது. இந்த லாபகரத் தொகையின் தற்போதைய பெறுமதி 9 லட்சம் டாலராகும்.

### கனிப்பொருள் தாபனம்

மணலிலிருந்து பிரித்தெடுக்கப்படுவதைவிட வருடம் தோறும் கடல்அலை மோதலால் புல்மோட்டை பகுதியில் கிடைக்கும் இல்மனைற்றின் அளவு 20 வீதமாகும். 1960ல் இலங்கையில் கனிப்பொருள் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது.

இக் கூட்டுத்தாபனம் இல்மனைற்ரை தரமான பொருட்களாக மாற்றி அனுப்ப திட்டமிட்டுவருகிறது. உதாரணமாக செயற்கை ரூரைல் அமெரிக்க டாலருக்கு விற்க முடியும். மிகவும் செறிவுள்ள ரைரேனியம் ஒரு தொன் 20,000 டாலர் மதிக்கப்படுகிறது.

### உலக வங்கி ஆலோசகர்

வெளிநாடுகள் கூடிய அளவில் இதில் மூதவீடு செய்யும் வகையில் முதலீட்டு சட்டத்தை அதிகளவு தளர்த்தவும் அரசு முன்வந்துள்ளது. உலக வங்கியினால் நியமிக்கப்பட்ட ஓர் ஆலோசகரின் உதவியுடன் அரசு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி இலங்கையும் வெளிநாட்டவர்களும் கூட்டுமுயற்சியாக இதனை கையாளலாம்.

இதற்கு ஏதுவாக இலங்கை அரசு வெளிநாடுகளுக்கு வாக்குறுதி ஒன்றையும் அளித்துள்ளது. அதாவது எக்காரணம் கொண்டும் நிறுவப்படும் கூட்டுத்தாபனம் அரசால் தேசியமயமாக்கப்பட மாட்டாது. எனவே வெளிநாடுகள் துணிந்து இதில் முதலீடு செய்யும்.

### இனப் பிரச்னை பெரும் தடை

இராணுவ தளபாட உற்பத்தியை பெரிதும் கருத்தில் கொண்டு குறிப்பாக போர் விமான உற்பத்திக்காக இங்கு முதலீடு செய்ய அமெரிக்கா. ஜப்பானை விட மேலும் ஆஸ்திரேலியா, பெல்ஜியம், இத்தாலி போன்ற நாடுகளும் மிகவும் கர்வம் காட்டி வருகின்றன. எனினும் இதற்கு இனப்பிரச்னையும் இங்கு நடைபெற்றுவரும் யுத்தமும் பெரும் தடையாக உள்ளது. இந்நிலையில் வெளிநாடுகள் இங்கு முதலீடு செய்யத் தயங்குகின்றன.

எனினும் கிழக்கை அரசு முற்றாக ஆக்கிரமிப்பதன் மூலம் இதனைச் சாதகமாக்க கடும் பிரயத்தனம் செய்துவருகிறது, புல்மோட்டையில் அதிகளவு சிங்களக் குடியேற்றத்தையும் தீவிரமாக மேற்கொண்டுவருகிறது. இங்கு உள்ள தமிழர்கள் துரத்தப்பட்டு வருகிறார்கள்.

இங்கு உள்நாட்டு யுத்தம் நடைபெறுவதால்தான் இலங்கை அரசு வெளிநாடுகளுடன் சேர்ந்து எடுக்கும் நடவடிக்கைக்கு மக்கள் எதிர்ப்புக் காட்டாது இருப்பதாக ஆராய்ச்சியாளர் ஒருவர் தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ மண்ணில் பல்வேறு வளங்கள் இருந்தும், அரசின் கடுமையான நடவடிக்கைகளால் எமது மண் பறிபோய்க்கொண்டிருக்கிறது. இதனைத் தடுக்க, தமிழர்கள் கடும் முயற்சியில் இனியாவது ஈடுபடவேண்டும்.

---

## ராசி பலன்

**13 - 10 - 1990**

**சனிக்கிழமை**

தசமி முன்இரவு 9-29வரை, ஆயிலியம் பி.இ, 4-22, மரண யோகம், நல்லநேரம் மாலை 3.03 முதல் 4 32, ராகுகாலம் 9.02 முதல் 10.30 வரை.

மேடம்: உடல் உபாதை, வேலைப்பளு, அலைச்சல் மிகுதி, அந்நியவாசம்.

இடபம்: அதிஷ்டவாய்ப்பு, உறவினர் வருகை, தாய்வழி உறவு, தொழில்சிறப்பு.

மிதுனம்: வீண்சச்சரவு, குடும்ப வேற்றுமை, தொழில் மந்தம், தயாளசிந்தை.

கடகம்: காரியவெற்றி, நல்லமுடிவு, சகோதர உதவி, விருந்துபசாரம்.

சிங்கம்: ஏமாற்றம், அந்நியர் பகை, தொழில்சிக்கல், வைத்திய செலவு.

கன்னி; எதிர்பாராத உதவி, நல்லோர் சினேகம், குடும்ப மகிழ்ச்சி, பொதுப் பணி.

துலாம்: தொழில்லாபம், பிரச்சனைக்குத் தீர்வு, கடமையுணர்வு, அனுறிர்பாராட்டு

விருச்சிகம்: மனக்குறை, குடும்பத்தில் வேற்றுமை, அதிக யோசனை. கடும்செலவு.

தனுசு: விரக்தியுறுதல், பொருள்நஷ்டம், வயிற்றில் ரோகம், குடும்பகவலை.

மகரம்: புதிய தொழில் முயற்சி, கடன்வரவு, பதவி உயர்வு, சுபகாரியம்.

கும்பம்: காரியபலிதம், ஞானிகள் ஆசி, குடும்பத்தில் சுபகாரியம், மனநிறைவு,

மீனம்: புதியமாற்றம், தொழில் பாதிப்பு, குடும்பத்தில் ரோகம், பயனற்ற பிரயாசம்.

ஜோஸ்யர்.

---

# 1991-ம் ஆண்டுக்கான பாடசாலை தவணைகள்!

(யாழ்ப்பாணம்)

1991-ம் ஆண்டிற்கான பாடசாலைத் தவணைகள் கல்வி உயர் கல்வி அமைச்சு செயலாளரினால்அண்மையில் வெளியிடப்பட்டது.

சிங்கள-தமிழ்ப் பாடசாலைகள் 1-ம் தவணை;1991ஜனவரி 02-ந் திகதி புதன்கிழமை தொடக்கம் ஏப்ரல் 05-ந் திகதி வெள்ளிக்கிழமை வரை.

2-ம் தவணை: 1991 மே 06-ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஆகஸ்ட் 02-ந் திகதி வெள்ளிக்கிழமை வரை.

3-ம் தவணை: 1991 செப்டம்பர் 02-ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் டிசம்பர் 06-ந் திகதி வெள்ளிக்கிழமை வரை.

**முஸ்லிம் பாடசாலைகள்**

முதலாம் தவணை: 1991 ஜனவரி 02-ந் திகதி புதன் கிழமை தொடக்கம் மார்ச் 15-ந் திகதி வெள்ளிக்கிழமை வரை.

2-ம் தவணை: 1991 ஏப்ரல் 22-ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஆகஸ்ட் 13-ந் திகதி செவ்வாய்க்கிழமை வரை.

3-ம் தவணை: 1991 செப்டம்பர் 02-ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் டிசம்பர் 06-ந் திகதி வெள்ளிக்கிழமை வரை. (153)

---

செக்கோசிலாவாக்கிய

# அதிபருக்கு யுனஸ்கோ விருது வழங்க முடிவு

(லண்டன்)

யுனஸ்கோ நிறுவனம் வழங்கும் மனித உரிமைகளுக்கான இவ்வாண்டு விருது செக்கோசிலாவாக்கிய அதிபர் திரு. ஹெவலுக்கு வழங்குவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

திரு. ஹெவல் மனித முன்னேற்றத்துக்கு புத்திகூர்மையாகவும் சுயசிந்தனையுடன் பணியாற்றியமைக்காக இவ் விருதை வழங்க முடிவு செய்திருப்பதாக லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இவருக்கான விருது மனித உரிமை தினமான டிசம்பர் மாதம் 10ம் திகதி வழங்கப் படும். (ச)

---

கொழும்பு

# தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை

(கொழும்பு)

கொழும்பில் இயங்கிவரும் தமிழ்ப் பாடசாலைகளில், ஆசிரியர் பற்றுக்குறை மிகக் கூடுதலாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாக அப்பகுதிகளில் இருந்து கூடுதலான ஆசிரியர்கள் கொழும்புக்கு வரமுடியாமல் இருப்பதினால், கொழும்பில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றுக்குறை தற்போது காணப்படுவதாகக் கல்வி ராஜாங்க அமைச்சர் மனோகரி புலேந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளுக்கு, நேற்று முன்தினம் அமைச்சர் திடீர் விஜயஞ்செய்து பார்வையிட்ட போது மேற்படி குறைபாடு கண்டுபிடிக்கப்பட்டது.

இப்பாடசாலைகளில் மதிய போசன விஷயத்திலும் குறைபாடுகள் காணப்படுவதாகவும், தரம் குறைந்ததும், போஷாக்கற்ற உணவு வகைகளுமே அங்கு வழங்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருப்பதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (வி)

### கொழும்பு சென்ற பலர்

## வவுனியா பூந்தோட்டம் பாடசாலையில் தஞ்சம்

[வவுனியா]

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற பலர் வவுனியா பூந்தோட்ட பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

கொழும்பு செல்வதற்காக வந்த இவர்களை வவுனியாவில் வைத்து சோதனை நடத்திய இராணுவத்தினர் திருப்பி அனுப்பியமையாலே இவர்கள் இப்பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளனர்.

கொழும்பு செல்பவர்களை சோதனைசெய்யும் இராணுவத்தினர் சிலரை கொழும்பு செல்வதற்கு அனுமதிக்கிறார்கள். சிலரை தமது அகதி முகாமில் ஒரு சில நாட்கள் வைத்திருந்துவிட்டு அனுப்புகிறார்கள். இன்னும் சிலரை தமது பயணத்தை தொடர விடாமல் திருப்பி அனுப்புகிறார்கள். அவ்வாறு திரும்பி வருபவர்களே குறிப்பிட்ட பாடசாலையில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இப்பாடசாலையை நோக்கி இராணுவத்தினர் 'ஷெல்' தாக்குதலும் நடத்திவருகிறார்கள்.

### சட்டவிரோத மின்பாவனை:

## கொழும்பில் 500 பேருக்கு 500 ரூபா வீதம் அபராதம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சட்டவிரோதமாக மின்சாரம் பாவித்தமைக்காக மாளிகாவத்தை நீதிமன்றத்தில் 500 பேருக்கு நேற்றுமுன்தினம் அபராதம் விதிக்கப்பட்டது.

சட்டவிரோதமாக மின்சாரம் பாவித்தமைக்காக அவர்களுக்கு 500 ரூபா முதல் 750 ரூபா வரை அபராதம் விதிக்கப்பட்டது.

ஒரு நீதிமன்றத்தில் ஒரே நாளில் 500 பேருக்கு அபராதம் விதிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். [வி]

### யாழ். நகரிலுள்ள

## வர்த்தக நிறுவனங்கள் வேறிடத்திற்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரிலுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக ஸ்தாபனங்களை தொடர்ந்தும் நகருக்கு வெளியே திறப்பதற்கு முடிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாண நகரிலுள்ள பெரும்பாலான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு பல லட்ச ரூபா செலவு ஏற்படுமெனவும் இதனை செய்து முடிப்பதற்கு ஓராண்டு காலம் தேவைப்படுவதால் வர்த்தகர்கள் இம்முடிவை எடுத்திருப்பதாக தெரிய வருகிறது. (ச)

### விமானக்குண்டு வீச்சினல்

## மனித உரிமை ஸ்தாபனம் முற்றுகச் சேதமடைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் மீது ஸ்ரீலங்கா அரசப் படைகளினுல் மேற்கொள்ளப்பட்ட விமான. ஷெல் குண்டுத் தாக்குதல்களினுல் யாழ்ப்பாணம் 3.ம் குறுக்குத்தெருவில் இயங்கி வந்த 'உலக மனித உரிமை ஸ்தாபனக் கட்டிடம் முற்றுக தகர்க்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்துக்கு அருகாமையில் உள்ள பல வீடுகளும் சேதமடைந்தன.

மேற்படி ஸ்தாபனத்தின் உதவி இயக்குனரான சட்டத்தரணி திரு. எஸ். ஆர். ஜெயராஜாவின் வீடும் விமானத் தாக்குதலினுல் தரைமட்டமாகியுள்ளது, குருநகர்ப்பகுதி டேவிற் றேட்டில் இவரின் வீடு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. [வி]

### வடிசாலை

## உற்பத்தி நிலையம் தீக்கிரை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வடிசாலைக் கூட்டுத்தாபன உற்பத்தி நிலையம் அண்மையில் இனந் தெரியாதவர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

இத்தீவைப்புச் சம்பவத்தினுல் வடிசாலை கூட்டுத்தாபனத்திற்கு பல லட்ச ரூபா நஷ்டமேற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under nmber B/100306/81.

### யாழ். மாவட்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை நல்லூர் சாதனு சி. சி. பாடசாலையில் மேற்படி கூட்டம் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கொத்தணி அதிபர்கள், உதவி கல்வி பணிப்பாளர்கள், யாழ்மாவட்ட பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் திரு. எஸ்.எம். சேதுகாவலர், நூற்றுக்கு மேற்பட்ட கல்விமான்கள், பெற்றோர்கள் ஆகியோர் மேற்படி கூட்டத்தில் பங்கு பற்றினுர்கள்.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

ஆசிரியர்கள் மாணவர்களின் பாதுகாப்பை பொறுத்த அளவில் ஏற்கனவே அறிவித்ததன் பிரகாரம் படிப்படியாக பதுங்குகுழிகளை அமைத்தல் வேண்டும்.

மாணவர்களின் பாதுகாப்புக்கு அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன் விரும்பிகள் ஆகியோர் சூழ்நிலைகளை பொறுத்து பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அந்தந்தப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் எக்காரணம் கொண்டும் இடமாற்றம் செய்யக்கூடாது.

சகல வகுப்புக்களுக்கான இந்த ஆண்டுக்குரிய பாடவிதானத்தை பூர்த்திசெய்யும் வகையில் கற்பித்தல் செயல்பாடுகள் இடம்பெறல் வேண்டும். (153)

### ★ கடந்த 4 மாதங்களில்

# 2,000 அப்பாவித் தமிழர்கள் அம்பாறையில் கொலை

(லண்டன்)

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை இடம்பெற்ற வன்செயல்களில் 2000க்கும் அதிகமான தமிழ்மக்கள் இராணுவத்தினராலும் ஊர்காவற்படையினராலும் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ஆயிரக்கணக்கானோர் காயப்பட்டுள்ளனர் என்றும் லண்டன் பி. பி. ஸி.நேற்று அறிவித்துள்ளது.

இப்படுகொலைகள் குறித்து இலங்கை அரசாங்கமோ அல்லது கொழும்பு பத்திரிகைகளோ ஆதாரபூர்வமான செய்திகளை வெளியிடாமல் மூடி மறைத்துள்ளது என்று பி. பி. ஸி. செய்தி ஸ்தாபனம் மேலும் குற்றம் சாட்டி உள்ளது.

இறந்தவர்களும், காயம் அடைந்தவர்களும் இவ்வளவு பெருந்தொகையினராக இருந்தும் அரச தரப்பினர் வாய் மூடி மௌனிகளாக இருப்பதையிட்டு அச்செய்தி ஸ்தாபனம் மேலும் கவலை தெரிவித்துள்ளது.

### மிதிவெடியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சீற் தகடுகளை எடுக்கச்சென்ற போதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது,

மேலும் காங்கேசன்துறை கடற்கரைப்பக்கமாகச்சென்ற ஏழாலையைச் சேர்ந்த சின்னத்துரை திருச்செல்வம் என்ற 15 வயதுச் சிறுவனும் ஒரு காலை இழந்துள்ளார். (56)

### பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

த்த ஷெல்லினுல் இரு கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன. பலியானவரின் சைக்கிளும் பலத்த சேதமடைந்தது.

மேற்படி சம்பவத்தில் கோண்டாவில் பகுதியில் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் விழுந்த ஷெல்லினுல் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இணுவிலைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் (வயது 55) என்பவரே பலியானுர் இவர் காங்கேசன்துறை சீமெந்து ஆலையில் கடமை புரிபவராவார்.

மேலும் உரும்பராய் பகுதியில் சிவகுமாரன் சிலைக்கண்மையில் வீழ்ந்த ஷெல்லினுல் அருகிலிருந்த இரு கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு அருகிலும். கோப்பாய் இராஜ வீதியில் தோட்டமொன்றிலும் வீழ்ந்து ஷெல்கள் வெடித்தன. அவற்றின் சேத விபரங்கள் பற்றி எதுவும் தெரியவில்லை. [56]

### வடமராட்சியிலும் பலாலி ஷெல்

பலாலியிலிருந்து நேற்று முன்தினம் நண்பகல் வடமராட்சி பகுதியை நோக்கி பலத்த ஆட்லறி ஷெல் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் ஒருவர் பலியானுர்.

மேற்படி ஷெல்கள் கம்பர்மலை, தொண்டைமானுறு, கெருடாவில், வல்வெட்டி, வல்வை போன்ற இடங்களில் விழுந்து வெடித்தன.

வல்வெட்டிப்பகுதியிலுள்ள றஞ்சனு சினிமாத்தியேட்டர் முன்பு விழுந்து வெடித்த ஷெல்லினுல் ஓய்வு பெற்ற கடற்படை உத்தியோகத்தர் இராசையா பாலசிங்கம் (வயது 55) என்பவர் ஸ்தலத்திலேயே பலியானுர் இவரது வீடும் பெரும் சேதமடைந்ததுடன் வீட்டில் இருந்த இவரது உறவினர்கள் கு. இராசேந்திரம் (வயது 52) வி. கதிரிப்பிள்ளை (வயது 53) படுகாயத்துடன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (51)

### போர்க்கால கூட்டத்தில்

## யாழ். கோட்டை முற்றுகை வீடியோ படக்காட்சி!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற போர்க்கால பொதுக் கூட்டத்தில் யாழ். கோட்டையைக் கைப்பற்றிய வீடியோ படம் ஒன்று மக்களுக்கு விடுதலைப் புலிகளால் திரையிட்டு காண்பிக்கப்பட்டது.

சொற்பொழிவுகள், நாடகம் ஆகியனவும் இந்தக் கூட்டத்தில் இடம்பெற்றன. (72)

## இந்திய விசா பெறுவதற்கு தமிழ்மக்கள் பெரும்சிரமம்

(யாழ்ப்பாணம்)

இந்தியா செல்வதற்கான விஸாவைப் பெறுவதில் தமிழ் மக்கள் பெரும் சிரமத்தை அனுபவிக்கின்றனர் என்று தெரியவருகிறது.

புதிய பாஸ்போர்ட் இருந்தால் இந்திய தூதரக அதிகாரிகள் மறுத்துவிடுகிறார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் பழைய பாஸ்போர்ட்டுக்கு விஸா பெறுவதில் மேலும் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர், [153]

### ஹெலியிலிருந்து கடும் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று மாலை பரவலாக ஹெலிக்கொப்டரில் இருந்து கலிபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வட்டுக்கோட்டை, மாவடி, சித்தன்கேணி, சங்கானை. அராலி. கோண்டாவில், கோப்பாய், யாழ்ப்பாணப்பகுதிகளில் இத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. (சி)

### மாவீரர் போட்டி

## முடிவு திகதி நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலை கலாசாரப் பிரிவு நடாத்தும் மாவீரர் தின கதை, கவிதை, கட்டுரை ஓவியம் ஆகிய போட்டிகளுக்கான முடிவுத்திகதி 15-10-90 ஆக இருந்து 25.10.90க்கு பின்போடப்பட்டுள்ளது. மேற்படிப் போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் உங்கள் விண்ணப்பங்களை உரிய திகதிக்கு முன்னர் பிரதேச காரியாலங்களிலோ அல்லது 'ஈழநாடு' காரியாலயத்திலோ ஒப்படைக்கலாம். (வி]

### இனப்பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டோம். யுத்தம்செய்து சாவதென்றுல் அப்படியே சாவோம்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் எம்மை மிகுந்ததூரம் பின்னெடுத்துச்சென்றுள்ளது என்றும் கூறினுர். (சி)

### இலங்கை நிலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் திரு. சிங்கையும் அமைச்சர் திரு. குஜ்ராலையும் தனித்தனியாகச் சந்தித்து திரு. கருணுநிதி தமிழீழப் பகுதியின் தற்போதைய நிலை குறித்து விரிவாக எடுத்துக் கூறியதாகவும் கூறப்படுகிறது

மேலும் தமிழகம் வந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வு குறித்து முதல்வர் உள்துறை அமைச்சர் ஜனுப் முக்தி முகமட் செய்யதுவையும் சந்தித்துப் ரபச்சுக்கள் நடாத்தியுள்ளார். (சி)

### தமிழீழம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முத்தமிழ் மன்றத்தில் பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது'

மேற்படி கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தலைவர்களும் உரையாற்றுவார்கள் (வி)

### பொதுசன உதவிப் பணம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தபாற்கந்தோரில கடந்த ஜூன் மாதத்திற்கான பொதுசன மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகிறது.

வட்டுக்கோட்டை தபாற்கந்தோரில் முன்னர் மாதாந்த உதவிப் பணத்தைப் பெற்று வந்தவர்களுக்கே இங்கு இப்பணம் கொடுக்கப்பட்டு வருகிறது. (139)

### அரசாங்க அதிபருக்கு பாராட்டு

(சித்தன்கேணி)

காரைநகர் மக்களும் பொது நிறுவனங்களும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்தின் சேவையைப் பாராட்டியுள்ளார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட காரைநகர் பகுதியில் உள்ள ஒன்பது கிராம சேவை அலுவலர் பிரிவு இலவச உலர் உணவு விநியோகம், இடம் பெயர்ந்தவர்களுக்கான இலவச உணவு விநியோகம் ஆகிய விநியோகங்களை துரித கதியில் மேற்கொண்டமைக்காகவே பாராட்டு தெரிவித்துள்ளனர்.

### சம்பளம் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி ஊழியர்களுக்கு கடந்த செயிடெம்பர் மாதச்சம்பளம் இதுவரை கிடைக்கவில்லை. ஏற்கனவே வழங்கப்பட்ட ஆகஸ்மாத சம்பள காசோலைகளை மாற்றமுடியாது இவர்களில் பலர் அல்லல்படுவதாகவும் தெரிய வருகின்றது'